
திருவாசகம் - 10
whoa.in
திருக்கோத்தும்பி கதைவடிவில்
கே. வி. குணசேகரம்
Whoa.in

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

மாணிக்கவாசக சுவாமிகள் வண்டுவகையில் மிகப் பெரிய வண்டான கோத்தும்பியிடம் சிவனின் பெருமைகளை எடுத்துச் சொல்லி அவரைப் போற்றி இன்னிசை இசைக்குமாறு கூறுகிறார். நான் அவர் கூறுபவற்றுக்குக் கதை எழுதுகிறேன். பலர் பக்கம் பக்கமாக எழுதுவர். அதை வாசிக்க யாரும் தயாராக இல்லை. சிலர் மணிக்கணக்காகப் பேசுவர். அதைக் கேட்பாரில்லை. இதுதான் இன்றைய உலகம். சொல்லவேண்டியவற்றை மக்களுக்குப் புரியும்படி அவர்களது மொழியில் கதைகளாக எழுதினால் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்பதற்காகவே சமய தத்துவச் செய்யுள்களுக்குக் கதை எழுதுகிறேன். இது பொருத்தமா இல்லையா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும். புத்திமான் பலவான் என்பதைச் சொற்களால், எழுத்தால் விளக்குவதைவிடக் கதையால் விளக்கினால் சிறுவர்கள் புரிந்து ஒழுக்கமாக வாழ்வர். சிங்கம் காட்டுமிருகங்களைக் கொன்றது. அதை முயல் புத்தியால் வென்ற கதையைச் சொன்னால் சிறுவர் விருப்புடன் கேட்பர். அதுதான் எனது பணி. இதற்குப் பெரும் வரவேற்புக் கிடைக்கிறது. இது பத்தாவது திருவாசகம். இதனைப் படித்துப் பயன் பெறுங்கள்.

நன்றி.

**கே. வி. குணசேகரம்**

உ

சிவமயம்

# திருக்கோத்தும்பி

## சிவனோடு ஐக்கியம் நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா

## தில்லையில் அருளியது

வண்டு வகைகளுள் மிகப் பெரியது கோத்தும்பி. அதை அரச வண்டு என்று சொல்வர். ஜீவாத்மாக்களுள் மானிட வடிவெடுத்து வந்துள்ளவன் கோத்தும்பி என்று உருவகப்படுத்தப்படுகிறான். பூவிலுள்ள நறுமணத்தையும் தேனையும் தும்பி விரும்புவது போன்று மனிதப் பிறப்பெடுத்தவன் சிவனை நாடவேண்டும். அதை உணர்த்துவது இப்பாடல்கள். சங்க காலத்தில் கன்னிப் பெண்கள் தும்பியைத் தமது காதலர்களுக்குத் தூதாக அனுப்பினர். அந்த முறையை மாணிக்கவாசகர் பின்பற்றித் தும்பியைச் சிவனைப் போற்றிப் படிக்கும்படி வேண்டுகிறார். திருவெம்பாவையிலும், திருப்பொற்சுண்ணத்திலும் அழகிய இளம் பெண்களைக் கொண்டு சிவனின் பெருமையைப் பாடிய மாணிக்கவாசகர் இப்பதிகத்தில் தும்பியைப் பாடும்படி கேட்கிறார்.

**பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த**
**நாவேறு செல்வியும் நாரணனும் நான் மறையும்**
**மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்**
**சேவேறு சேவடிக்கே சென்றுதாய் கோத்தும்பீ.** 01

ஆச்சிரமத்தில் திருவாசகவிழா நடைபெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார்; “சிவனடியார்களே, எமது நாயன்மார்கள், ஞானிகள், முனிவர்கள் எப்போதும் சமயத்தை மக்களின் மேம்பாட்டுக்காகவே எழுதினர். அவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கருத்துக்கள் இன்றல்ல உலகம் உள்ளவரை பொருந்தும். உதாரணமாக மாணிக்கவாசக சுவாமிகள் தாயின் கர்ப்பத்தில் உள்ள கரு பத்துமாதங்களும் அடையும் மாற்றம் பற்றியும், பிறந்தபின் அதை வளர்ப்பது பற்றியும் கூறுகிறார். இப்படிப் பலவற்றைச் சொல்ல பல அறிஞர்கள் காத்திருக்கிறார்கள். சிவபெருமான் எப்போதும் தேவர்களை விட மனிதர்களின் மேம்பாட்டையே விரும்பியுள்ளார். அவர் சொல்கிறார்; “படைப்புத் தெய்வமான பிரமதேவரும் இந்திரனும், அழகிய சரஸ்வதியும், மகாவிஸ்ணுவும், நான்கு வேதங்களும், சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய பெருமை மிக்க சோதிகளும், தேவர்களும் சிவபெருமானின் பெருமையாக அறிந்து கொள்ள மாட்டார்கள். அத்தகைய பெருமை மிக்க இடப

வாகனான சிவனை நீ போற்றிப்பாடு" என்கிறார். தேவர்கள் எல்லோரும் தாம் தாம் பெரியவர்கள் என்று நினைத்துச் சிவனைப் பெரிதாக எண்ணுவதில்லை. ஆனால் மனிதர்கள் சிவனின் அடிமைகள் என்று நினைத்து வணங்குவதால் சிவனைக் காண்கிறார்கள், பேசுகிறார்கள், ஆட்கொள்ளப்படுகிறார்கள். உதாரணமாக ஆயிரக்கணக்கான சிவனடியார்களைக் குறிப்பிடலாம். கண்ணப்பர், சம்பந்தர் உட்பட அறுபத்து மூன்று நாயன்மார்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள். நம்மோடு வாழும் கதிரேசன் பெரும் சிவபக்தர். மக்கள் அவர் சிவனோடு பேசுவார் என்கின்றனர். ஆனால் அவர் சொன்னதில்லை. இன்று தாம் அவதாரம் என்று சொல்லிப் பணம் சேர்க்கும் முயற்சியில் தான் பலர் இருக்கிறார்கள். அவர்களால் எமது நாயன்மார்கள் செய்த அற்புதங்களைச் செய்து காட்ட முடிந்தால் உண்மையில் அவர்கள் அவதாரங்கள் தான். தமிழ்நாட்டில் உணவுப்பஞ்சத்தை நீக்கியவர்கள் சம்பந்தரும் நாவுக்கரசரும். இப்போதும் அத்தகைய சக்தி வாய்ந்தோர் இருக்கிறார்கள். அண்மையில் பக்கத்து ஊரில் இரண்டு வருடங்கள் மழை பெய்யாததால் மக்கள் இடம்பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். எஞ்சி இருந்த ஊரவர் கதிரேசனை அங்கு அழைத்துச் சென்றனர். அவர் சிவனுக்குப் பூசை செய்ய பெருமழை பொழிந்தது. இதை அவ்வூரவர் சொல்லிப் பெருமைப்படுவர். ஆனால் கதிரேசனும் அங்கு சென்ற சிவனடியார்களும் எதுவும் சொல்வதில்லை. இது இப்போதும் நடக்கும் புதுமை. எமது ஆச்சிரமத்திற்கு வரும் சிவனடியாருக்காக நாமும் சேர்ந்து சிவனைப் பிராரத்திக்கின்றோம். அவர்களின் தேவைகள் பல முற்றுப் பெறுகின்றன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நானார் என் உள்ளமார் ஞானங்க ளார் என்னை யாரறிவார்**
**வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி**
**ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்**
**தேனார் கமலமே சென்றுதாய் கோத்தும்பீ.** 02

"மாணிக்கவாசகர் சொல்கிறார்; சிவபெருமான் என்னை ஆட்கொள்ளாவிட்டால் எனக்கு எந்த மதிப்பும் கிடைத்திருக்காது. அப்படி மதித்திருப்பாரானால் அவருக்குப் புத்தி கெட்டிருக்க வேண்டும். மாமிசம் பொருந்திய பிரமனின் கபாலத்தில் பிச்சை ஏற்று உண்ணும் அம்பலவாணனது அமிர்த சொரூபத்தை கோத்தும்பியே எனக்காகப் பாடு" என்கிறார். பலர் இன்று தொழில் செய்ய வெட்கப்படுகின்றனர். கோவிலில் சிலர் பொங்கும் பொங்கலை வாங்கி உண்ண விரும்புவதில்லை. அதை வாங்கிச் சென்று தான் வளர்க்கும் நாய்க்குக் கூடக் கொடுப்பதில்லை. மறைவான இடத்தில் வீசி விட்டுச் செல்கின்றனர். சிவன்கோவிலுக்கு கதிரேசன் வந்தால் யார் பொங்கினாலும் அதை

வாங்கிச் சிவனின் பிரசாதம் என்று உண்டு விடுவார். அதனால் வறியவர்கள், சாதியில் குறைந்தவர்கள் கதிரேசன் வந்த பின்பு தான் பொங்குவர். அவர் மனமகிழ்வுடன் அதைப் பெற்று உண்டால் சிவன் உண்டதாக நினைப்பர். ரகுவரன் மிகுந்த ஏழையின் மகன். தகப்பன் மகேசன் கூலி வேலை செய்பவன். ரகுவரன் கதிரேசனின் வீட்டில் கூலி வேலை செய்து படிப்பான். அவன் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்றவன். அவற்றிற்கெல்லாம் உதவியவர் கதிரேசன். அவனுக்கு உயர்ந்த பதவி கிடைத்தமையால் சிவனுக்குப் பொங்கினான். பொங்கி முடிந்ததும் கதிரேசனுக்கு மதிப்புக் கொடுப்பதற்காக ஒரு மலர்மாலையைக் கொண்டு வந்தான். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார்; ‘‘மகனே கோவிலுக்கு அரசன் வந்தாலும் அவனை வணங்கக்கூடாது. ஏனென்றால் கோவிலில் பெரியவன் சிவன். அதனால் மாலையைச் சிவனுக்குப் போடு’’ என்றவர். பொங்கிக் கொண்டிருக்கும்போது பலர் சென்றுவிட்டனர். கதிரேசன் காத்திருந்து பொங்கல் முடிய பொங்கலை வாங்கி உண்டுவிட்டுச் சென்றவர். ஒருநாள் நல்லைநாதன் அதுபற்றிக் கேட்டபோது, ‘‘நல்லை, சிவன் பிச்சை எடுப்பவன், அவன் பிச்சை எடுத்துண்ணும்போது யாரையும் விலக்கி வைத்ததில்லை. கோவிலில் எல்லோரும் சமம். உயர்ந்த சிவனடியார் என்று யாராவது இருக்கிறார்களா? சிவனது படைப்பில் புழுவும் மனிதனும் சமம். சிவன் எல்லாவற்றையும் ஒரு மாதிரியாகவே காக்கிறார்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே**
**நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும்**
**குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.** 03

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொடர்ந்து உரையாற்றினார்; “கோத்தும்பி தேன் மிக மிகச் சுவையானது. அமிர்தம் போன்றது. அதை உண்ண உனது இனத்தவர்களாகிய தேனீக்கள் தான் எமக்கு உதவுகின்றன. அதனால் பிருங்கராஜனே, பூமியின் அமிர்தமான தேனில் நீ ஆசை கொள்ளாது ஆனந்தக் கூத்தனான சிவனில் இருக்கும் பரமானந்தத்தேனில் ஆசை கொள். பின்பு அதை விளம்பரம் செய். அதற்காக நீ ரீங்காரமிட்டு அவனது புகழைப் பாடு’’ என்று சொல்கிறார். பூவில் உள்ள தேன் சிற்றின்பத்தைக் குறிப்பது. அது அனுபவித்தவுடன் மாறும் தன்மை உடையது. சிவனிடத்தில் இருக்கும் தேன் பேரின்பம் தருவது. அது மாறாதது. பொங்கல் முடிய ரகுவரனும் மகேசனும் கதிரேசனின் அருகில் வந்தனர். அவர் சொன்னார்; ‘‘மகேசா அருமையான மகனை உனக்குச் சிவன் தந்துள்ளான். நீ பாக்கியவான்” என்றவர்

ரகுவரனின் பக்கம் திரும்பிச் சொன்னார்; ‘‘மகனே, உலக வாழ்வு சிற்றின்பத்தைத் தான் தரும். நீ பெரும் சிவனடியான். அதனால் பேரின்ப வாழ்வை விரும்பு. முன்பே உனக்கு நான் யாவற்றையும் கூறியுள்ளேன். நீ வயது வந்தவன் காதல் வலையில் விழுந்துவிடாதே. நல்ல குடும்பப் பெண்ணாகப் பார்த்து நான் உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். பெண்களின் அழகு பலரைத் தடுமாற வைத்துப் படுகுழியில் தள்ளிய வரலாறு உனக்குத் தெரியும். உனக்கு இரு சகோதரிகள் உள்ளனர். அதை நினைத்துக்கொள்” என்றபோது ரகுவரன் அழுதான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்**
**கண்ணப்பென் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.** 04

கதிரேசன் ரகுவரனுக்கு சொன்னார்; ‘‘மகனே மாணிக்கவாசக சுவாமிகள் கோத்தும்பிக்குச் சொல்வதாக நினைத்து மக்களாகிய எமக்குச் சொல்கிறார். “அன்பின் உச்சமான நிலையில் கண்ணப்பன் இருந்தான். அன்பின் ஆரம்பநிலையில் தான் நான் இருக்கிறேன். எனினும் எனது தந்தையான நீ, என்னைக் கருணையினால் ஆட்கொண்டு, என்னைக் குணவான் ஆக்கும்படி செய்து அருளினாய். மிகவும் நுண்ணியதாகப் பொடி பண்ணிய திருநீற்றை அணிந்துள்ள சிவனிடஞ் சென்று அவனது புகழை வண்டுகளின் வேந்தனே நீ போற்றிப்பாடுவாயாக” என்கிறார். கண்ணப்பனைப் போன்ற உயரிய பக்தன் உலகில் யாரும் இல்ல. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர். அப்படியானால் அன்பின் உயர்நிலையில் அவர் இருத்தல் வேண்டும். ஆனால் அவர் அன்பின் ஆரம்பநிலையில் தான் இருப்பதாகக் கூறுகிறார். தன்னைத் தாழ்த்திக் கொள்வது உயர்ந்தவர்களது பண்பாகும். அதனால் உயர்பதவி கிடைத்து விட்டதென்று கர்வப்படாதே. சிவனருளால் கிடைத்த பதவியைக் கொண்டு மக்களுக்குச் சேவை செய். உன் குடும்ப நிலையால் உன்னைக் கேலி செய்தோர் தற்போதைய உனது பதவியின் நிலையால் உன்னை உயர்வாக நினைப்பதுபோல நடப்பார்கள். எதைச் செய்வதனாலும் சிவநினைவோடு செய். நீ எந்தவகையிலும் குறைந்தவன் அல்ல. ஆனால் உயர்ந்தவன் என்று எண்ணிவிடாதே. உன்னை உயர்ந்தவனாகச் சிவன் உயர்த்தி இருக்கிறான். எல்லாவற்றையும் மனதுக்குள் வைத்து மகிழ்வடை. வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாதே என்பது தான் மாணிக்கவாசகரது எண்ணம். அதை ஒருபோதும் மறந்துவிடாதே” என்றார் கதிரேசன்.

**அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்**
**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே**
**பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற**
**மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 05**

“சிவனடியார்களே, வேதகாலத்தில் தேவர்களும் மனிதர்களும், முனிவர்களும் யாகம் செய்யப்படும்போது செய்யப்படும் அவி உணவை யாருக்குக் கொடுப்பது என்று தடுமாறினர். பல்வேறுபட்ட தேவர்களுக்கு அவற்றை வழங்கியபோதும் தாம் கொடுத்தமையால் புண்ணியம் தமக்கு வந்து சேருமா என்பதையிட்டுத் தடுமாறினர். அதனால் அழகிய வண்ணமுடைய பெரிய வண்டே, அத்தேவர் பெரியவன், இத்தேவர் பெரியவன் பெரியவன் என்று நினைத்துப் பொய்த்தேவர்களைப் புகழ்ந்து பேசிப் புலம்புகின்ற இவ் உலகில், எனக்குப் பிறவித் தொடர்பு இல்லாமல் ஒழியும்படி நான் பற்றுக் கொண்டு வணங்குகின்ற மெய்த்தேவனான சிவனைப் போற்றி நாதம் எழுப்புவாயாக!” என்று மாணிக்கவாசக சுவாமிகள் வண்டுக்குக் கூறுகிறார். சங்ககாலம் தொடக்கம் யார் பெரிய கடவுள் என்ற நினைப்பு மக்களிடம் உண்டாகியுள்ளது. இன்று மக்களைத் திசை திருப்புவதற்காக பல சமயங்கள் தோன்றியுள்ளன. அவர்கள் பிழைப்புக்காக எதை எதையோவெல்லாம் செய்கிறார்கள். அதை நம்புவோர் அவர்களது தெய்வந்தான் பெரியதென்று வாதிடுகின்றனர். அண்மையில் எமது ஊருக்கு வந்த ஒரு குழுவினர் தாம் நோய்களைத் தீர்ப்போம் என்று கூறிக் குருடர்களையும், முடமானவர்களையும், ஊமைகளையும் குணப்படுத்துவதாகக் கூறினர். முதலில் பேச முடியாத ஒருவன் வந்தான். அவனைப் பேசப்பண்ணினர். கண்தெரியாத ஒருவனுக்குக் கண் தெரியப் பண்ணினர் முடவன் ஒருவன் நொண்டி நொண்டி வந்தான். சில நிமிடங்களில் அவன் எழுந்து நடந்தான். அதனால் மக்கள் ஆச்சரியப்பட்டனர். அவன் வைத்த உண்டியலில் பெருந்தொகைப் பணத்தைப் போட்டனர். நல்லைநாதன் அந்த முடமானவனை எங்கோ கண்டதாக நினைத்தார். நினைவுக்கு வரவில்லை. அதனால் சிவனைத் தியானித்தார். ஒரு வாரதத்திற்கு முன் அயலூரில் இருக்கும் நண்பரிடம் சென்றபோது அதே கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் முடவனாக வந்து பின் குணமாகி நடந்து சென்றவன் தான் இப்போது முடமாகி வந்து குணமானவன். செய்தியை அறிந்த இளைஞர்கள் அவனைப் பிடித்து அடிக்க அவன் உண்மையைச் சொன்னான். அதனால் சிவனடியார்களே, நாம் பற்றி நிற்கின்ற சிவன் தான் மெய்யான தெய்வம் என்பதை மறவாதீர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்**
**பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்**
**சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த**
**வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 06**

“சிவனடியார்களே பாடுபட்டுத் தேடிய செல்வம், ஆசைப்பட்டுத் திருமணம் செய்து கொண்ட மனைவி, அருந்தவம் செய்து பெற்ற புதல்வர், பெரிதாக மதித்த குலம், பயின்ற கல்வி இவை யாவும் மாயம் நிறைந்த இவ் உலகில் பிறப்பு இறப்புக்களை மாறி மாறி உண்டுபண்ணக்கூடிவையாகும். இத்தகைய மாயமான மனத்தோற்றங்களை விலக்கக் கூடிய ஞான வடிவினனான பரமனிடத்துப் போய் வண்டுகளுக்கு அரசனான தும்பியே உனது இன்னிசையால் அவனைப் போற்றிப் பாடுவாயாக” என்று சொல்கிறார் மாணிக்கவாகசர். தும்பியை அவர் மனித உயிராக எடுத்து அதற்கு ஆலோசனை கூறுகிறார்”.

“பண்டிதர் மயில்வாகனம் பெரும் கல்விமான். அவர் கற்பித்தலோடு விவசாயம் செய்பவர். காணித்தரகு, கல்யானத்தரகு என்று பல தொழில்களை அவர் செய்வதால் அவர் பெரும் தனவந்தன். அவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள். ஒரு பெண்பிள்ளை. நல்ல அழகி அவள். அவளுக்கு நல்ல தொழிலில் உள்ள மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டிருந்தார். அவள் ஒருவனைக் காதலித்தாள். அவன் பெரிய உத்தியோகத்தன் போல நடந்தான். அப்போது அவளுக்குத் திருமணம் பேசி முற்றானது. அதனால் அவள் காதலித்தவருடன் சென்றுவிட்டாள். பண்டிதரின் இரண்டு பிள்ளைகள் படிப்பதில்லை. அவர்கள் தீயவர்களுடன் சேர்ந்து குடித்து வெறித்துத் திரிந்தனர். அவரது ஆசை மனைவி புற்றுநோய் வந்து இறந்துபோனாள். பெரும் கல்விமானும் சாதிமானுமாகிய பண்டிதர் மயில்வாகனம் தனது வீட்டில் வெளிவேலைகளைச் செய்யும் நாகம்மாவைக் கொண்டு சமைத்து உண்ணுகிறார். முன்பென்றால் அவர் அவளை வீட்டுக்குள்ளே விடமாட்டாள். அறுபது வயது வந்ததும் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். முன்பு அவரைப் பெரிதாக மதித்த பாடசாலைச் சமூகம் இப்போ அவரைக் கவனிப்பதேயில்லை. இதுதான் வாழ்க்கை. நாம் நிலைக்கும் என்று தேடியவை யாவும் எம் கண்முன்னே தேவையற்றனவாகிவிடும் அதனால் தான் மாணிக்கவாசகர் தும்பியைக் காட்டி மக்களுக்கு உபதேசம் செய்கிறார். மக்கள் இதை உணர்ந்து நித்தமும் பேரின்பத்தைத் தரும் சிவனது திருவடியை அடைய வேண்டும. அதற்காக ஒவ்வொருவரும் மனத்தோற்றங்களை அகற்றக்கூடிய ஞானவடிவினனான பரமசிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடித் துதிக்க வேண்டும்” என்கிறார் என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்**
**கெட்டேன் மறப்பனோ கேடுபடாத் திருவடியை**
**ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்**
**சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 07**

மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார், "சிவனை நினைத்தால் உள்ளம் அமிழ்தாக இனிக்கும். அப்படியான சிவனை நினைப்பதால் நட்டம் ஏதும் வருமா? இல்லையே, அழியாத இறைவனான சிவனது திருவடியை நான் மறந்து விடுவேனோ? சிவனை நினைக்க விரும்பாத பெரும் பாவிகளைக் காணவும் நான் விரும்பமாட்டேன். பெருமையில் எல்லோரையும் விட மேலானவனான சிவனை, வண்டுகளின் அரசே நீ இசையுடன் பாடிப்பணிவாயாக" என்கிறார்.

"சிவனடியார்களே ரகுவரனின் தந்தையான மகேசனின் மூத்த சகோதரி சாரதா. இளம் வயதில் அவள் வேலைக்கு இருந்த பெருந் தனவந்தரின் குடும்பத்திற்கு வீட்டுவேலை செய்தாள். அவளின் திறமையை விரும்பிய வீட்டார் அவளைத் தம்முடன் வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று விட்டனர். முப்பது வருடங்கள் கழித்து அவள் ஊருக்கு வந்திருந்தாள். அவள் அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனைத் திருமணம் செய்து இப்போது பெரும் பணக்காரி. ஊருக்கு வந்தபோது தனது மகளுக்கு அவள் ரகுவரனைத் திருமணம் செய்ய விரும்பினாள். இப்போது அவர்கள் கிறீஸ்தவ சமயத்தில் சேர்ந்துவிட்டனர். அதனால் மகேசன் மறுத்துவிட்டான். பின் சாரதா தமது செல்வம் செல்வாக்குகளைக் கூறி ரகுவரனைத் தனது மகளைத் திருமணம் செய்யும்படி கேட்டாள். அதற்கு ரகுவரன் சொன்னான்; "மாமி, நாம் சிவனை வழிபடுபவர்கள். அவனைத் தவிர வேறு எவரையும் வணங்கமாட்டோம். அத்துடன் சிவனை வணங்காதவர் வீட்டில் பச்சைத் தண்ணீர் கூடக் வாங்கிக் குடிக்கமாட்டோம். நான் நிறைய உழைக்கிறேன். வசதியாக வாழ்கிறேன். பணம் உங்களிடம் குவிந்து கிடக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு வசதியான வீடு கட்டலாம். ஆடம்பரமாக வாழலாமே தவிர வேறு என்ன செய்ய முடியும்? இறந்தவனை உயிர்ப்பிக்க முடியுமா…? எமது இனத்தவரான பண்டிதர் மயில்வாகனத்தின் மனைவி புற்றுநோயால் இறந்தாள். அவளை மயில்வாகனத்தின் பணம் காப்பாற்றியதா..? இல்லையே. எமக்குள்ள வசதிகள் போதும். எமது தேவையறிந்து சிவன் உதவுவார். அதனால் நான் உங்களின் மகளைத் திருமணம் செய்ய விரும்பவில்லை என்றான். பணம் தேவை தான். ஆனால் பணமல்ல வாழ்க்கை என்று உணர்பவன் தான் மகிழ்வாக வாழ்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு**
**நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த**
**எனதாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்**
**குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 08**

"சிவனடியார்களே சாரதா சொன்னாள், "ரகு, எனது மகளைத் திருமணம் செய்ய ஊரிலேயே பலர் விரும்புகின்றனர். அப்படியிருக்கப் பெரும் பணக்காரியான என்னை நீ அவமதிக்கிறாய். எனது சகோதரனின் மகன் என்றபடியால் தான் கேட்டேன்' என்று சாரதா சொன்னபோது ரகுவரன் சொன்னான்; "மாமி மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்" தான் ஒரு விதைப்பொருளாக இருந்து, தன்னிடமிருந்து எத்தனையோ பொருட்களை உருவாக்கியவன் சிவன். என்னை நலமுடையவனாக வைத்தான். நாய்போல அலைந்த என்னை பல்லக்கில் ஏற்றி வந்து அடியார்களின் நடுவில் இருக்க வைத்தான். அவன் எனக்குத் தந்தை. தாய்க்கும் தந்தை. அப்பெருமான் அழியாத பொருள். அதனால் தும்பியரசே அவனிடம் சென்று இனிமையாக அவனது புகழைப் பாடு என்கிறார். தும்பி என்று குறிப்பது மனிதரை, மனிதராகப் பிறந்தவர்கள் அவனது புகழைப் பாடினால் நினைத்தவை யாவும் கிடைக்கும். அவனருளால் நாயாய்க்கூட மதிக்காதவர்கள் இன்று பெரும் தகுதியுள்ளவனாக நினைக்கின்றனர். போற்றுகின்றனர். அத்தகைய பெருமைகளைத் தந்து அறிஞர்கள் மத்தியில் உயர்ந்த இடத்தில் என்னை வைத்த எனது தந்தையை நான் மறப்பேனா…? பணம், பொருள், புகழ், அதிகாரம் யாவும் வரும் போகும். நீங்கள் இங்கு வாழும்போது எப்படி வாழ்ந்தீர்கள். இப்போ எப்படி வாழ்கிறீர்கள். இனி எப்படி வாழப் போகிறீர்களோ தெரியாது. ஆனால் நான் சிறப்புடன் வாழ எனது தந்தையான் சிவன் உதவுவான் என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்**
**சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு**
**மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த**
**கருணைக் கடலுக்கோ சென்றூதாய் கோத்தும்பீ. 09**

"கெடுகுடி சொற்கேளாது சாகிறவன் மருந்து குடியான் என்று பெரியவர்கள் கூறுவார்கள். இந்த காட்டூரில் வாழ ஆசைப்படுகிறாய். நாம் வாழும் நாட்டை வந்து பார். நாம் எவ்வளவு ஆடம்பரமாக வாழ்கிறோம் தெரியுமா…?" என்று சாரதா கேட்டதற்கு ரகுவரன் சொன்னான்; "ஒவ்வொருவரும் விரும்புவதுதான் அவர்களுக்கு அமிர்தமானது.

சொர்க்கமானது. இது கிராமம். நாம் மிகவும் அன்புடனும் நட்புரிமையுடனும் வாழ்கிறோம். இங்குள்ளவர்களில் பலர் வசதியானவர்கள். வசதியென்றால் என்ன? நல்ல உணவு, நல்ல நீர், வசதியான வீடு, போக்குவரத்திற்கு வாகனங்கள், பாடசாலை, கோவில் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவும் போதும். உங்களிடம் ஆயிரம் கோடி ரூபா இருக்கலாம். அதற்காக கண்டபடி வாழ முடியுமா..? அளவுக்கதிகமாக உண்ண முடியுமா..? நோய்கள் வசதி பார்த்தா வருகின்றன? இயற்கையை மீறி யாராலும் எந்நாட்டிலும் வாழ முடியாது. உங்கள் நாட்டில் சமீபத்தில் பூகம்பம் ஏற்பட்டது. அடுக்குமாடி வீடுகள் உடைந்து நொருங்கின. அப்போ புயலும் மழையும் வந்து மக்களைத் துன்புறுத்தியது. துன்பமும் இன்பமும் இறைவன் தருவது. நாம் பணக்காரர் எமக்கு அழிவு வராது என்று எண்ணிய உங்களது நாட்டில் வாழ்ந்த சிலர் சில நிமிடங்களில் எல்லாவற்றையும் இழந்து விட்டனர். மாணிக்கவாசகர் கூறுவதுபோல எம் இறைவன் நீலகண்டன். கருவி காரணங்களுக்கு அப்பாற்பட்டவன்.. அவனது திருவடிகளைத் தொழுபவர்களுக்குப் பிறப்பு இறப்புச் சம்பந்தமான மயக்கம் இல்லை. அப்படிப்பட்ட கருணாகரனை, தும்பியே புகழ்ந்து பாடு'' என்கிறார். அவரது வார்த்தைகளை நம்பி நானும் எனது குடும்பத்தினரும் சிவனைப் போற்றிப் புகழ்ந்து வணங்கி வாழ்கிறோம். எமக்கு எந்தக் குறைகளும் இல்லை. நாம் வாழும் பூமியாகிய யாழ்ப்பாணத்தில் இப்போ எந்தக் குறைகளும் இல்லை. பூகம்பம் இல்லை, பெருங்காற்று இல்லை. மகிழ்வுடன் வாழும் நாம் சிவனோடு வாழ்வோம் என்றவன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருந்து**
**நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாந்**
**தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்டதன்கருணைத்**
**தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 10**

''மாமி எமது முன்னோர் எமக்குத் தேவையான எல்லாவற்றையும் எழுதி வைத்துவிட்டுத்தான் சென்றுள்ளனர். அதைப் புதுமை விரும்பிகள் என்று சொல்வோர் ஏற்காது மேலைநாட்டவர்களின் போலியான கோட்பாடுகளை நம்பி எமது பாரம்பரியத்தை இகழ்கின்றனர். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "நோய்வாய்ப்பட்டு, விரைவில் முதுமை அடைந்து, எழுந்து நடக்கமுடியாமல் நடக்க முடியாத கன்றுபோல் நான் இருக்கிறேன். பொருள்ச் செல்வத்தை நாம் அறிந்து விரும்பாததுபோல அருள்ச் செல்வத்தை நான் அறிந்தும் விரும்பாதவனாக இருக்கிறேன். அப்படி இருந்தபோதும் தாயைப் போலக் கருணை கொண்டு ஒளிமயமான இறைவன் வலிய வந்து என்னை

ஆட்கொண்டான். தும்பிராஜனே, அப்படிப்பட்ட கருணை வள்ளலை இராகம் இசைத்து பாடுவாயாக'' என்கிறார். மாமா அதாவது உங்கள் கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்பு இங்கு வந்தபோது அறுபது வயதிருக்கும். கிழவனைப் போல எழுந்து நடக்கமுடியாது தள்ளாடினார். பசிக்க மாத்திரை உண்பார். பின்பு அது சமிக்க மாத்திரை உண்பார். அதற்குக் காரணம் மேல்நாட்டு உணவு வகைகள். சில காலத்திற்கு முன்பு இங்குள்ள மேலைநாட்டு வைத்தியம் செய்யும் வைத்தியர்கள் தேங்காய் எண்ணெய் உண்ணக்கூடாது. மீன் இறைச்சியைச் சாப்பிடுங்கள் என்றனர். இப்போ தேங்காய் எண்ணெயை மட்டும் பாவியுங்கள். மீன் இறைச்சி உண்ணாதீர்கள் என்கின்றனர். அதைவிட எமது பாரம்பரிய வைத்தியர்கள் கூறிய உணவு வகைகளை உண்ணச் சொல்கிறார்கள். நடக்கச் சொல்கிறார்கள். மூச்சுப் பயிற்சி செய்யச் சொல்கிறார்கள். இவை பற்றித் திருமூலர் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார். இவற்றைச் சொன்னால் உங்களுக்குச் சிரிப்பாக உள்ளது என்று ரகுவரன் சாராதாவுக்கு சொன்னவன்' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**வன்னெஞ்வன் கள்வன் மனவலியன் என்னாதே**
**கல்நெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட**
**அன்னஞ் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்**
**பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 11**

ரகுவரன் கதிரேசனது வீட்டுக்குச் சென்றபோது அங்கே சாரதா இருந்தாள். அவள் தனது மகளை ரகுவரனுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டுமென்று விரும்பினாள். சாரதா ஆண்களைப்போல் நீண்டகால்சட்டையும் சட்டையும் அணிந்திருந்தாள். அவள் கொண்டுவந்த மகளின் நிழற்படத்தைப் பார்த்தபின், முழுமையாக மறுத்துவிட்டான் ரகுவரன். அத்துடன் நடேசனுக்கு அணுவளவு கூட விருப்பமில்லை. ஊருடன் தனக்கருகில் தனது மகனை வைத்திருக்கவே அவன் விரும்பினான். சாரதா வந்து தனது எண்ணத்தைக் கதிரேசனுக்குச் சொன்னபோது அவன் அதை விரும்பவில்லை. எனினும் அதை வாய்திறந்து சொல்லவில்லை.

“ஊரில் உள்ளவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்புகின்றனர். ஆனால் ரகு விரும்புகிறானில்லை. தயவுசெய்து அவனைச் சம்மதிக்கச் சொல்லுங்கள். எனது அண்ணனது குடும்ப உறவை இத்திருமணத்தின் மூலம் நான் தொடர விரும்புகின்றேன். நான் இல்லாத காலத்தில் அந்த உறவு அற்றுப்போம்” என்றாள் சாரதா.

அங்கு வந்த ரகுவரன் சொன்னான்; "ஐயா, நான் நல்ல உத்தியோகத்தில் மதிப்புடன் இருக்கச் செய்தவன் சிவன். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோலக் கல்நெஞ்சனாக இருந்தவன் நான். இளகாத மனத்தை உடையவன் நான். முன்பு நான் யாரையும் மதிப்பதில்லை. யாராவது கோபித்துக் கதைத்தால் அவர்களுக்கு அடித்தும் விடுவேன். ஒருமுறை என்னை ஆசிரியர் முட்டாள் என்று ஏசியதற்கு நான் அவருடன் சண்டையிட்டனான். அதிபர் எச்சரித்தும் நான் சமாதானமாகி மன்னிப்புக்கேளாததால் அவர் என்னைப் பாடசாலையிலிருந்து நீக்கப்போவதாகக் கூறியவர். அப்போது நீங்கள் வந்து என்னைச் சமாதானப்படுத்திச் சிவனைப்பற்றிக் கூறிச் சிவனடியாராக்கினீர்கள். அப்படிப்பட்ட என்னைப் புறக்கணிக்காது எனது கல்மனதை உருகச்செய்து ஆட்கொண்டவன் அம்பலவாணன். அவன் இருக்கும் தில்லையில் அன்னங்கள் கூடியிருந்து அழகு செய்கின்றன. அவனது பொன்போன்ற திருவடியை வேந்தாகிய வண்டே புகழ்ந்து பாடு" என்கிறார் மாணிக்கவாசகர். அவ்வாறு வாழ்ந்து பழகிய என்னால் இவ்வூரையும், எமது சிவனையும் விட்டுச்செல்ல முடியாது" என்றான் ரகுவரன்.

**நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்**
**பேயென துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்**
**சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளந்**
**தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 12**

சாரதாவுக்கு கதிரேசன் சொன்னார்; "மகளே, திருமணம் என்பது இருவரது மனமொத்த விருப்பமாகும். அதை வற்புறுத்திச் செய்தலாகாது. ஒருநாள் இருநாள் விடயமென்றால் விருப்பு வெறுப்புப் பார்க்கத் தேவையில்லை. இது வாழ்நாள் பிரச்சினை. ரகுவிற்கு விருப்பமில்லை என்கிறான். உங்களது மகளிற்கு விருப்பமா? அதைத் தெரிந்துதான் கேட்கிறீர்களா…?" என்று கதிரேசன் கெட்டபோது சாரதா சொன்னாள்; "அவள் எமக்கு அடங்கிய பிள்ளை. நாம் சொல்வதைக் கேட்பாள்".

"அது கூடாது. முதலில் அவளைக் கேளுங்கள். பெண்கள் இப்போ முன்புபோல இல்லை. பெரும் சிவபக்தர்களின் பெண்பிள்ளைகள்கூடக் காதலிக்கிறார்கள். காதலென்பது மனிதனைப் படைக்குமுன்பே உருவானது. உமை சிவனைக் காதலித்தவள். அதனால் கேளுங்கள்" என்றபோது ரகு சொன்னான்; "ஐயா, கேளாமல் விடுவதுதான் நல்லது. கேட்டு அவள் சம்மதித்தால் நான் அவளைத் திருமணம் செய்தல் வேண்டும். அது என்னால் இயலாது. எனக்கு என்னைப்போல ஒரு சிவபக்தை தான் தேவை. அவர்கள் கிறீஸ்தவர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோல, "நாய்

போன்ற என்னைக் கருவியாகக் கொண்டு சிவன் தனது சிவசேவைகளைச் செய்விக்கிறான். அதனால் அவன் தன்னைப் புகழ்வித்துக் கொண்டான். பேய்போல அலைந்த எனது மனதைப் பொறுமையுடன் சமப்படுத்திய பெருமைக்குரியவன் அவன். எனது பணிவிடைகளை இகழாது அவன் ஏற்றுக்கொண்டான். அவன் தாய் போன்றவன். அதனால் பெரிய தும்பியே அவனருகே சென்று இசையை முழங்கு" என்கிறார். நான் இருந்தநிலை உங்களுக்குத் தெரியும். நாயாகக்கூடப் பிறர் எம்மை மதிப்பதில்லை. சிவசேவை செய்யத் தொடங்கியபின் அரசனாக மதிக்கின்றனர். அந்தநிலை நீடிக்க வேண்டுமானால் மேலும் மேலும் நான் சிவனைப் போற்றிப் புகழ்ந்து வணங்க வேண்டும். அதற்கு இத்திருமணம் பெரும் தடையாக விளங்கும்" என்றான் ரகுவரன்.

**நான்தனக் கன்பின்மை நானுந்தா னும் அறிவோம்**

**தானென்னை ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்**

**ஆன கருணையும் அங்குற்றே தானவனே**

**கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 13**

"மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "நான் சிவன்மீது அன்பில்லாதவன். என்பதைச் சிவனும் நானும்தான் அறிவோம். ஆனால் அவன் என்னை ஆட்கொண்டதை முழு உலகமும் அறியும். இதுதான் அவனது கருணையாகும். அவனுக்கும் எனக்கும் இடையே பிரியாத யோகம் உண்டாகும்படி பெரிய தும்பியே நீ இனிய இசையை எழுப்புவாயாக" என்கிறார். என்னைப்பற்றி உங்களுக்கு மட்டும்தான் தெரியும். என்னால் சிவநினைவில்லாதவர்களுடன் பேசக்கூட முடியாது. எனது மேலாளர் கிறிஸ்தவர். அவரோடு அன்பின் நிமித்தம் பேசுவேன். எனது வேலைகளை மிகச் சிறப்பாகச் செய்வேன். அமைச்சின் அதிகாரிகள் என்னில் அன்பும் மதிப்பும் வைத்திருக்கின்றனர். அதனால் சில தினங்களுக்கு முன் என்னை அழைத்து எனது மேலதிகாரி, "ரகு, நீ மிகவும் கெட்டிக்காரன். எல்லோருடைய மதிப்பையும் அன்பையும் பெற்றமையால் எனக்கு உன்னைப் பிடிக்கும். எனது தங்கையின் மகள் பட்டதாரி. அவளுக்கு ஐந்து ஆண் சகோதரர்கள். வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் நீ கேட்கும் பணம் தருவார்கள். அவளை நீ திருமணம் செய்தால் நான் மகிழ்ச்சியடைவேன்" என்றார். அவரது மனதை முறிக்க என்னால் முடியவில்லை. அத்துடன் சிவனைப் பற்றித் தெரியாதவர்களுக்குச் சிவனைப்பற்றிக் கூறுவதில் அர்த்தமில்லை. அதனால், சிவனை நினைத்துக்கொண்டு, "எனக்குத் திருமண நிட்சயதார்த்தம் முடிந்து விட்டது" என்றேன். அவர் அதை நம்பிவிட்டார். பொய் சொன்னதை நினைக்கக் கவலையாக உள்ளது" என்றான் ரகுவரன்.

"சிவனுக்காக எதையும் செய்யலாம். நீ ஒரு சாதாரண பொய்யைத்தானே கூறினாய்" என்றார் கதிரேசன்.

**கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே**
**மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி**
**அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட**
**திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 14**

சாரதாவுக்கு ரகுவரனின் பேச்சு மிகுந்த கவலையைக் கொடுத்தது. அதனால் அவள் ரகுவரனின் வீட்டுக்கு வந்தாள். அது ரகுவரனுக்கு எரிச்சலைக் கொடுத்தது. அவள் நல்லைநாதனையும் அழைத்து வந்தாள். நல்லைநாதனுக்கு ரகுவரனைப்பற்றித் தெளிவாகத் தெரியும். அவன் சிவனைத்தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை. சாரதா விசயத்தைச் சொல்லிக் கேட்டபோது அவர் ரகுவரனைப்பற்றி விபரமாகச் சொல்லியிருந்தார். எனினும், வேறு வழியின்றிச் சாரதாவுடன் கூட வந்திருந்தார்.

"ரகு, எனக்கு எனது அண்ணனின் குடும்பத்தோடு உறவு வைக்க வேண்டும் என்று நெடுநாளாக ஆசை. உன்னை எனது மகள் திருமணம் செய்வதைத்தவிர வேறு வழிகளால் உறவைத் தொடர முடியாது. தயவுசெய்து ஒத்துக்கொள்" என்றாள் சாரதா.

"மாமி, என்னை வற்புறுத்தாதீர்கள். இது வாழ்க்கை. ஆயிரங்காலத்துப்பயிர். மாணிக்கவாசக சுவாமிகள், சிவன் உலகிற்குப் பிறப்பிடமானவன். அத்துடன் அதீதத்தில் இருப்பவனும் அவனே. அவன் மணம் நிறைந்த பூக்களை அணிந்துள்ள கூந்தலையுடைய உமாதேவியாரோடு எழுந்தருளி அருள்பவன். அத்துடன் அவன் அருவமாகவும் இருப்பவன். வேதத்தை உரைத்த அந்தணன் அவன். அப்படிப்பட்ட சுந்தரேசனின் காதில் படும்படியாக அவனிடம் சென்று ஒரு இனிமையான இசையை மகிழ்வுடன் இசைப்பாய் வண்டு மன்னா" என்கிறார். உங்கள் சமயத்தவர்கள் பூச்சூடுவதில்லை. எமது சமயப் பெண்கள் பூச்சூடினால் மகாலட்சுமி என்பார்கள். பூச்சூடினால் பூச்சூடிய பெண்ணை நாம் உமாதேவியாக, மகாலட்சுமியாக, திருமகளாக நினைப்போம். அந்த நினைவுதான் எனக்குத் தேவை. அப்படியல்லாத நினைவு எனக்கு வேண்டாம்" என்றான் ரகுவரன்.

**நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்**
**தானுந்தன் தையலுந் தாழ்சடையோன் ஆண்டிலனேல்**
**வானுந் திசைகளும் மாகடலும் ஆயபிரான்**
**தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 15**

சாரதாவுக்குத் துக்கமாக இருந்தது. சாரதாவின் மகள் சிவானி முழுமையான வெள்ளைக்காரப் பெண்ணைப்போல வாழ்பவள். அவள் எங்கே செல்கிறாள், என்ன செய்கிறாள் என்றுகூடத் தெரியாது. அதனால் ரகுவரன் மிகவும் அமைதியானவன். நல்லவன், உறவினரை மதிப்பவன். அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தால் அவள் எமது கலாச்சாரத்திற்குத் திரும்புவாள் என்று நினைத்தாள். ரகுவரன் சம்மதித்தபின் அவளைக் கேட்கலாமென்றும் நினைத்தாள்.

“மாமி, உங்களின் சகோதரபாசத்தை நினைத்து மகிழ்கிறேன். தயவுசெய்து என்னை வற்புறுத்தாதீர்கள். நான் ஒரு சிவபக்தை அல்லாத பெண்ணைத் திருமணம் செய்யமாட்டேன். பணம், காதல், பதவி என்பன சிலகாலத்திற்குத்தான் இனிக்கும். மகிழ்வைத்தரும் பின் வாழ்க்கை என்று வரும்போது பல்வேறு பிரச்சினைகள் தானாகவே வரும். மதம் மாறிச் செய்தல், சாதிமாறிச் செய்தல், தகுதிக்கு மிஞ்சிய இடத்தில் செய்தல் என்பது பெரும் சிக்கல்களை உண்டாக்கிச் சிவத்துரோகங்களைச் செய்ய வைக்கும். சிவன் உமையை ஒருகணமும் பிரியாதிருப்பவன். அவன் மாணிக்கவாசகரை அம்பிகை சமேதரராக வந்து ஆட்கொண்டவன். சிவனுடன் அம்பிகை கூட வராவிட்டால் தான் கெட்டிருப்பேன் என்றும் தனது மனமும் கெட்டிருக்கும் என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். அத்துடன் ஆகாயம், திக்கு, கடல் அனைத்துமாய் இருக்கும் ஈசனின் திருவடியில் தேனூறும். அதனால் அவனது திருவடிக்குச் சென்று நீ ஊது” என்கிறார். சிவனை அம்பிகையோடு சேர்த்துத்தான் வணங்கலாம். பிரித்து வணங்க முடியாது. அத்துடன் உமாமகேசுவரனை நான் எனது மனைவியுடன் கூடச்சென்று வணங்க வேண்டும். அதுதான் எனது இலட்சியம், கனவு, பிரார்த்தனை” என்றான் ரகுவரன்.

**உள்ளப் படாத திருஉருவை உள்ளுதலும்**
**கள்ளப படாத களிவந்த வான்கருணை**
**வெள்ளப் பிரான்என் பிரான்என்னை வேறேஆட்**
**கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 16**

சாரதா மிகுந்த துயருடன் தான் தங்கியிருந்த விடுதிக்கு வந்தாள். அவளதுமனம் துன்பத்தால் அல்லற்பட்டது. அந்த நேரத் தேவைக்காக அவள் மதம் மாறினாள். அதன்பின் திருமணம் செய்தபோது அவளின் கணவன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினான். இடையிடையே மாதா கோவிலுக்கு அவள் சென்று வருவாள். சிவானிக்குச் சமயத்தில் நம்பிக்கை இல்லை. அவளது போக்கு விசித்திரமானது. ஒரு திருமணத்தைச் செய்து வைத்தால் திருந்துவாள் என்று நினைத்துத்தான் அவள் ஊருக்கு வந்தாள். தான் வெளிநாட்டில் வசதியாக இருப்பதால் சகோதரன் ஏற்றுக் கொள்வான் என்று நினைத்தாள். ஆனால் அவளது சகோதரன் துப்பரவாக விரும்பவில்லை. அவள் விடுதிக்கு வந்தபோது அங்கே ஒருவர் அவளுக்காகக் காத்திருந்தார். சாரதாவைக் கண்டதும் எழுந்து அருகில் வந்து சொன்னார்; “சாரதா, உன்னை எனக்குத் தெரியும். என்னை மறந்திருப்பாய். நாகநாதன் என்பது எனது பெயர். மகேசனின் நண்பன். மகேசனுக்கோ ரகுவரனுக்கோ இந்தத் திருமணத்தில் விருப்பமில்லை. ரகுவரன் சிவனில் பைத்தியம் கொண்டவன். உயர்ந்த தொழிலில் இருக்கிறான். அந்தத் தொழிலைத் தந்தவர் சிவன் என்று சொல்லித் திரிபவன். உனது மகள் நவநாகரிகப் பிரியை. இருவருக்கும் ஒருபோதும் ஒத்துவராது. திருமணமானால் சிலநாட்கள்கூடச் சேர்ந்து வாழமாட்டார்கள். அதனால் அந்த ஆசையை விட்டுவிடு. சிவன் நினைக்க முடியாதவன். அழிவில்லாத பேரின்பத்தைச் சிவனடியார்களுக்குக் கொடுக்கும் கருணைக்கடல் எப்பொழுதும் அடியவர்களுக்கு உதவிகள் பலவும் செய்யும் எம்பெருமான் அவன். என்னைத் தனித்து அடிமைகொண்ட அந்தச் சிவனின் பெருமைகளை எடுத்துக்கூற முடியாதென்று கோத்தும்பிக்குக் கூறும் மாணிக்கவாசகர், அதை சிவனிடம் சென்று இசை இசைக்குமாறு கூறுகிறார். இப்படிப்பல்வேறுபட்ட முனிவர்களும் கூறியுள்ளதாகக் கூறும் ரகுவரன் மாற்றுச் சமயத்தைச் சேர்ந்த யாரையும் பார்க்கக்கூட மாட்டான்.” என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அதன் பின் சாரதா கதிரேசனோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு நடந்தவற்றைக்கூறி நாகநாதன் என்பவர் யார்? அவருக்கு என்னை எப்படித் தெரியும் என்று விசாரித்தாள். அப்படி ஒருவர் இருப்பதாக அவர் அறியவில்லை. ரகுவரனுக்காகச் சிவன்தான் சென்றுள்ளார் என நினைத்தார். அதை எப்படிச் சொல்வது? அதனால் அவர், ரகுவரனின் நல்ல நண்பர் என்று மட்டும் கூறினார். அவர் அதை வேறு எவருக்கும் கூறவில்லை.

**பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்**
**மெய்யாக் கருதிக்கிடந்தேனை ஆட்கொண்ட**
**ஐயாவென் ஆருயிலே அம்பலவா என்றவன்றன்**
**செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 17**

மகேசன் கதிரேசனின் வீட்டுக்கு வந்து சொன்னான்; “சாரதா எனது ஒரே ஒரு தங்கை. அவள் மீது எனக்கு அன்பு உண்டு. அவள் எனது உறவைத் தொடர விரும்புகிறாள். சிறுவயதில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரது வீட்டில் அப்பா அவர்களது வீட்டு வேலைகளைச் செய்வதற்காகக் கொண்டு சென்று விட்டார். வீட்டுக்காரனுக்கு வெளிநாட்டில் பெரியதொரு வேலை கிடைத்தமையால் அவளை வீட்டுவேலை செய்ய அழைத்துச் சென்றனர். அவள் படிக்காததால் எழுத வாசிக்கத் தெரியாது. பின் அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் அவளைத் திருமணம் செய்தான். அவன் பெருங்குடிகாரன். அதனால் அவள் நிம்மதியாகக் குடும்பம் நடத்தவில்லை. சிலகாலம் செல்ல அவன் இறந்துவிட்டான். இருப்பினும் அவள் நல்ல வசதியோடு அங்கே வாழ்கிறநாள். ஒரே ஒரு மகள். அதை நினைக்க மிகவும் கவலையாக உள்ளது. சிவனை நிம்மதியாகத் தொழமுடியவில்லை. ரகுவரன் இதற்குக் கடைசிவரையும் சம்மதிக்க மாட்டான். தாய்க்கும் விருப்பமில்லை. சில வருடங்களுக்கு முன் சிவானி வந்தவள். வெள்ளைக்காரப் பெண்கள்போல அரைகுறை ஆடைகள் அணிந்துவந்த அவளை ஊரவர் வேடிக்கை பார்த்தனர். இது எனது மனைவிக்குப் பிடிக்கவில்லை. அமைதியாகச் சிவனை வணங்கிவிட்டு மகிழ்வுடன் வாழும் அவனுக்குச் சிவானி நல்ல மனைவியாக வாழமாட்டாள். அதனால் அவனது வாழ்க்கையை நாமே சீரழித்தவர்களாகிவிடுவோம். நிலையில்லாப் பொருட்களை நிலையானது என்று பற்று வைக்காதீர்கள். சிவனிடம் அதை ஒப்படையுங்கள் என்கிறார். அவர் சொல்வது உண்மை. ஆனால் பாசம் என்னைச் சிந்திக்கவிடுகிறது இல்லை”.

“மகேசா, உனது மகன் திருவாசகத்தின் பொருளுணர்ந்து படிக்கும் மேலாளன். அவன் திருவாசகத்தைப் பண்ணுடன் பாடினால், கோவிலில் நிற்கும் கோவில் காளை மாடுகளும், பசுக்களும்கூட அதைக்கேட்டு ரசிப்பது உனக்குத் தெரியும். அவன் சொன்னான்; “நிலையில்லாத அநித்தியப் பொருட்களை நிலையானதென்று நான் நினைத்திருந்தேன். அது பொய்யானவை, நிலையில்லாதவை என்று திருவாசகத்தைப் படித்தபோது உணர்ந்தேன். அதனால் நான் உலகத்தைப் புரிந்து கொண்டேன். மாணிக்கவாசகரைப்போலக் கட்டைப் பிரமச்சாரியாராக வாழவேண்டும் என்ற எண்ணம் எனது மனதில் தோன்றுகிறது. மாணிக்கவாசகர் ராஜவண்டுக்குச் சொல்வதுபோல “சிவனது திருவடியை வணங்கி அப்பனே, ஆருயிரே, அம்பலவாணா என்று அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடப்போகிறேன்” என்றவன். நீ தேவையில்லாத கதைகளை அவனுடன் கதைக்காதே. இல்வாழ்க்கையின் மகத்துவத்தையும், புனிதத்தையும் அவனுக்கு விளக்கமாகக் கூறியுள்ளேன். சிவபரனின் மகள் உமையவள் பெரும் சிவபக்தை, குணவதி. சிவனடியார்கள்மீது அளவற்ற பாசம் கொண்டவள். அவள்

ரகுவரனுக்குப் பொருத்தமானவள். நான் அவர்களுடன் கதைத்துவிட்டுச் சொல்கிறேன். அதுவரை ரகுவரனுடன் எதுவும் கதையாதே” என்றார் கதிரேசன். பாசம் என்ற ஆசை சிவனின் அன்பையே கெடுத்துவிடும் என்று நினைத்தான் மகேசன்.

**தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்**
**சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்**
**கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 18**

கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; “மகேசா, ஒரு தீயதைத் தொடர்ந்து நினைத்தால் அத்தீயது நல்லதாக மாறிவிடும். இது உலகின் இயல்பு. நீ சிவபக்தன். ஆரம்பத்தில் உனது சகோதரி வேற்று மதத்தவர். மாமிசம் உண்பவர். சிவனைப் போற்றாதவள் என்று நினைத்தாய். அது சிவபக்தனுக்குரிய குணம். பின்பு பாசத்தால் சாரதா உனது தங்கை என்று நினைத்தாய். பாசம் வென்றுவிட்டது. இப்போ சிவநிந்தனை செய்யும் உனது சகோதரி புனிதவதியாகிவிட்டாள். இதன்மூலம் நீ அடிநிலைப்பக்தனாகி விட்டாய். உனது சகோதரியை விரும்புவது பாசத்தால், அந்த பாசத்தால் தான் துன்பங்கள் எம்மை ஆக்கிரமிப்பதாக எமது சமயம் சொல்கிறது. நீ இப்போது ஆசைக்கு அடிமையாகி விட்டாய். அதனால் உனக்குப் பல துன்பங்கள்தான் வரும். ரகுபரன் சிவபக்தன். உனது ஆசையால் அவனை இழக்கவேண்டி வரும். உனது மனைவியும் உனது ஆசையை விரும்பமாட்டாள். பாசம் பொல்லாதது, கொடியது, அது மனிதனை ஆட்டிப்படைப்பது. மனதில் பல்வேறு சிந்தனைகளை உருவாக்கிப் பாவம் செய்ய வைப்பது. யோசித்துப்பார் காளைமாடு சிவனின் வாகனம். பசு உலகமாதா. அதை உமைக்கு ஒப்பிடுவர். அவற்றைக் கொன்று தின்பவர்களை நாம் பார்க்கவே கூடாது. ரகுவரனை நீ இதுபற்றிக் கேட்டால் அவன் மாணிக்கவாசகர் கூறியதைத்தான் கூறுவான்; “சிவன் அர்த்தநாரீசுவரன். சிவசொரூபத்தில் அவன் குழை, நீறு, சூலம் ஆகியவற்றைத் தாங்கியிருக்கிறான். அதைப்போல அம்பிகை தன் சொரூபத்தில் துகில், தோடு, சாந்து, கிளி, வளை ஆகியவற்றைக் கொண்டிருக்கிறாள். இவ்விருவரினதும் பெருமைகளைத் தும்பியாரே நீ சென்று பாடு என்று கூறுவதுபோல நானும் சிவனையும் அம்பிகையையும் புகழ்ந்து பாடியவாயால் வேறு எவரையும் அழைக்கவும் மாட்டேன் என்பான். அதனால் அவன் திருமணத்தை வெறுத்தும் விடுவான். அதனால் பேசாது இருப்பது தான் நல்லது” என்றார்.

**கள்வன் கடியன் கலதியிவன் என்னாத**
**வள்ளல் வரவர வரந்தொழிந்தான் என் மனத்தே**
**உள்ளத் துறதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந்**
**தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.** **19**

மகேசன் சென்ற சிறிது நேரத்தில் ரகுவரன் கதிரேசனின் வீட்டுக்கு வந்து அவரை வணங்கினான். பின்; "நீங்கள் தான் எனது வழிகாட்டி. சிவனின் பெருமைகளைக் கூறிச் சிவனடியார் ஆக்கியவர். அதனால் எனக்கு உயர்ந்த பதவி கிடைத்தது. நான் தொடர்ந்து சிவனைப் பூசித்தேன். அவன் எனக்குப் பதவி உயர்வைத் தந்துள்ளான். மாணிக்கவாசகர் அரச தும்பிக்குச் சொல்வதை நான் சிவனுக்குச் சொல்வேன்; "சிவனே, என்னைக் கள்ளன் என்றோ, கொடூரமானவன் என்றோ, கேடுள்ளவன் என்றோ புறக்கணிக்காது வள்ளலான நீ படிப்படியாக வந்து எனது உள்ளத்தை ஆட்கொண்டு குடியேறிவிட்டாய். எனது துன்பங்களையெல்லாம் ஒன்றும் விடாது நான் உனக்குக் கூறிவிட்டேன். அதனால் நீ விதித்தபடியே நான் வாழ்வேன் என்று அரச தும்பி சிவனுக்குக் கூறுவதுபோலக் கூறிவிட்டேன். அதனால் தான் எனக்குப் பதவி உயர்வு கிடைத்தது" என்றான்.

"மகனே, சிவனை நம்பிய உன்னை அவன் நல்லவழியில் வாழச் சொல்கிறான். ஒரு மனிதன் சிவசேவை செய்து இன்பமாக வாழ்ந்து சிவனை அடைந்து பேரின்பம் பெறவேண்டும் என்பது தான் சிவனின் விருப்பம். அதனால்தான் சிவன் அர்த்தநாரீசுவரனாக இருக்கிறார். சிவனில் பாதி உமை. உமையில்லாவிட்டால் சிவனால் இயங்க முடியாது. சிவசக்தி என்பது சிவனும் சக்தியும் சேர்ந்த உருவம். இப்போது உனது வாழ்வை மேலும் மேம்படுத்தக்கூடிய ஒரு பெண்ணை நீ திருமணம் செய்தல் வேண்டும். சிவபரனின் மகள் உமையவளை உனக்குத் தெரியும். சிவனின் பெரும் பக்தை. நல்ல அழகி, குணவதி, உனக்குப் பொருத்தமானவள். நான் சிவபரனுடன் கதைத்தேன். அவர் உடனே ஒப்புக் கொண்டார். உமையவளுடனும் கதைத்தேன்; "அவர் சிவனைப் போன்றவர். அவருக்குத் தொண்டுகள் செய்து வாழும் பாக்கியத்தைச் சிவன் எனக்கருளினால் நான் பெரும் பாக்கியசாலி" என்றாள். உனது விருப்பத்தைச் சொல். நீ எனது வார்த்தைகளை விரும்பி ஏற்பாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்றார் கதிரேசன்.

கோவிலில் எப்போதும் தொண்டுகள் செய்யும் உமையவளை ஒரு கணம் நினைத்துப் பார்த்தான் ரகுவரன். அவளது சிவந்த வட்டவடிவான முகம் அவனது மனத்திரையில் தோன்றியது. அழகான கூரிய கண்கள். நீண்ட தலைமுடி. நெற்றியில்

இட்ட நீறு யாவும் தோன்றி மறைய மறுத்தன. அவன் அவளைப் பலமுறை கோவிலில் கண்டுள்ளான். ஆனால் நினைத்துப் பார்த்ததில்லை. இப்போது உள்ளத்துள்ளே நுழைந்தவள் வெளியேற மறுத்தாள்.

“மகனே, உனது நிலையைப் பார்த்தால் அவளை உனக்குப் பிடித்துவிட்டது போலத் தெரிகிறது. அவள் உனக்கெனச் சிவனால் படைக்கப்பட்டவள்” என்றார் கதிரேசன்.

சில நிமிடங்கள் யோசித்த ரகுவரன்; “நீங்கள் தான் எனது சிவன். நீங்கள் கூறுவதைத் தட்ட முடியுமா…?” என்றான். கதிரேசனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்று**
**ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க**
**நாய்மேல் தவிசிகட்டு நன்றாய் பொருட்படுத்த**
**தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 20**

“ஐயா, மாணிக்கவாசக சுவாமிகள் தும்பிக்குச் சொல்கிறார்; “தும்பி மன்னா, சிவனை விளங்குவது கடினம் என்று பிரமதேவரும் திருமாலும் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நான் அவனின் பெருமைகளை உணர்ந்து போற்றிப் புகழ்ந்து பாடி ஆடி மகிழ்வடைகிறேன். ஏனென்றால் நாய் போன்ற எனக்கு உயர்ந்த ஆசனம் தந்து என்னை உயர்நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளான். அக்கினிச் சுவாலையை ஒத்த அவனது திருமேனியை நீ போற்றிப்பாடு” என்கிறார். அதுபோல என்னையும் எனது குடும்பத்தையும் மதித்தவர் யார்…? சிறு வயதில் வறுமை காரணமாக என்னை எனது தந்தை தன்னுடன் கூலி வேலைக்கு அழைத்துச் சென்றார். அதை நீங்கள் தடுத்துக் கற்க வசதிகள் செய்தீர்கள். சிவனின் பெருமையை உணர்த்தினீர்கள். அதனால் சிவன் இன்று எனக்குப் பெரிய பதவி தந்தான். பின் உயர்வும் தந்தான். இதற்கெல்லாம் காரணம் நீங்கள் வழிகாட்டிய சிவன். இன்று என்னை நாடே மதிக்கிறது. புகழ்கிறது. இப்போது ஒரு சிவபக்தையை மனைவியாக எனக்குச் சிவன் தந்துள்ளான். இவ்வாறு பல்வேறு விதமான நன்மைகளை வேறு யார் தருவார்கள். அதனால் எனது வாழ்நாள் முழுவதும் எனது மனைவியோடு சேர்ந்து சிவனைப் போற்றிப் புகழ்ந்து வணங்கப் போகிறேன்.” என்றான் ரகுவரன்.

திருச்சிற்றம்பலம்.